**தேதி :** 06.08.2026 **SC.No. :** 47/2021 **PW :5** நல்லசிவம்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலத்தில் என்னுடைய அப்பா வாகனத்திற்கு பைனான்ஸ் தொழில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு சென்ற சிறிது நேரத்தில் போலீசார் அங்கு வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது போலீசார் என்னிடம் கேட்டு சம்பவத்தை குறித்து தெரிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். வீட்டிலிருந்த கேமராவை போலீசார் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான்.

"11.01.2018 ம் தேதி, மாலை 04.30 மணிக்கு இருசக்கரவாகனத்தில் நல்ல தண்ணீர் பிடிப்பதற்காக ஊரணிக்கு போனேன். அப்போது எதிரிகள் மகாராஜனும், இராமகிருஷ்ணனும் என்னை வழிமறித்து, "இந்த டீசர்ட் எதற்கு போட்டிருக்கிறாய், நீ தான் கோவிலுக்கு வரி கொடுக்கவில்லைலா, எதற்காக போட்டிருக்க" என்று கேட்டார். அப்போது நான் "நீங்க ஆள் தெரியாம பேசுகிறீர்கள், வம்பிழுக்க நான் வரலை" என்று சொன்னேன். அப்போது எதிரிகள் இருவரும் என் டீசர்ட்டை பிடித்து இழுத்து கிழித்து விட்டார்கள். அதற்கு முன்பு வரை அந்த எதிரிகளுக்கும், எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. அதன் பின்னர் எனது அப்பாவை போன் செய்து வரச்சொன்னேன். எதிரிகள் இருவரிடம் எனது அப்பா கேட்டபோது, அவர்கள் எங்களுக்கு வேண்டியவர்களுக்கு நீங்க பிரச்சனையா

இருக்கீங்க என்று சொன்னார்கள். கோவில் மண்டபத்தை அடைப்பதற்கு நீங்கள் தான் காரணம் என்று சொன்னார்கள். அதன் பின்னர் நாங்கள் காவல்நிலையம் சென்று 11.01.2018 ம் தேதி புகார் கொடுத்தோம். 16.01.2018 ம் தேதி போலீசார் விசாரணைக்கு வந்தார்கள். போலீசார் சத்தம்போட்டு அனுப்பி வைத்தார்கள். 17.01.2018 ம் தேதி அருணாப்பேரியில் கோவில் திருவிழா. அதிகாலை எனக்கு 02.30 மணிக்கு ஒரு பால்கார அண்ணாச்சி போன் செய்து, எனது கடையில் புகை மூட்டமாக இருந்ததாகவும், தீபிடித்து எறிவதாகவும் சொன்னார். நான் வீட்டிலிருந்து கேமரா மூலமாக பார்த்து விட்டு உடனே நான், எனது அப்பா, எனது தம்பி ஆகியோர்கள் சம்பவயிடத்திற்கு வந்தோம். மேல் மாடியில் இருந்த சபாரி கார் முழுவதும் எறிந்துவிட்டது." என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் சம்பவயிடத்தில் வைத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.07 16:58:55 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 47/2021**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலாயுதம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | கம்ப்யூட்டர் டெக்னீசியன் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 34 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 06.08.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் கம்ப்யூட்டர் சென்று வைத்து வேலை செய்து வருகிறேன். 2018 ம் ஆண்டு பொங்கல் முடிந்து 2, 3 நாள் கழித்து நல்லசிவம் என்பவர் பென்டிரைவில் கார் எறிந்த போட்டோக்களின் பதிவு கொண்டு வந்தார். அதனை நான் புகைப்படமாக பிரிண்ட் செய்து கொடுத்தேன். (புகைப்படங்கள் தாக்கல் செய்யப்படவில்லை).

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.08.07 16:59:05 +0530